



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 219 01.2.2026 SUNDAY THAI : 18 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 219 01.2.2026 ஞாயிற்றுக்கிழமை தை : 18 விலை : ரூ.5/-


## கற்பனையான ஊழல் குற்றச்சாட்டு

# “முதல்வர் ஆதங்கம்!”

சென்னை: பிப்.1-

சென்னையில் நடந்த தனியார் 'டிவி' நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: திறமையான அரசை நடத்துவதால்தான், நாட்டிலேயே யாரும் அடைய முடியாத, 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சியை, தமிழகத்தில் சாத்தியப்படுத்தி இருக்கிறோம். இந்த வளர்ச்சியை, நாங்கள் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. ஒருபுறம் மத்திய பா.ஜ., அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும், அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு, மறுபுறம் தொலைநோக்கு பார்வையுடன், எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.



**இற்றுப்போன குற்றச்சாட்டு**

இதை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், சமூக வலைதளங்களில் பொய்களை பரப்பிக் கொண்டிருக்கின்றனர். எங்களைப் பற்றி அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் எல்லாமே, பழைய 'ஸ்கிரிப்ட்'தான். அதில் முதல் குற்றச்சாட்டு வாரிசு அரசியல். இது எங்களை களத்தில் எதிர்க்க முடியாதவர்கள் வைக்கும் இற்றுப்போன குற்றச்சாட்டு. அடுத்தது ஊழல். இது வரைக்கும் எங்கள் மீது வைத்த குற்றச்சாட்டுகளை, யாராவது ஆதாரத்துடன் நிரூபித்து இருக்கின்றனரா. கற்பனையான குற்றச்சாட்டுகளை சொல்லி, எங்கள் மீது பழி சுமத்துகின்றனர்.

**வாஷிங் மெஷினில்...**

பா.ஜ.,வுடன் இருக்கும் எல்லோரும் ஊழல்வாதிகள்தான். அதிலும், அ.தி.மு.க.,வினர் உச்ச நீதிமன்றம் வரை சென்று, ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள். கூட்டணியில் இல்லாத நேரத்தில், அவர்கள் மீது எத்தனை குற்றச்சாட்டுகளை பா.ஜ.,வினர் கூறினர். இப்போது வாஷிங் மெஷினில் வைத்து, அவர்களை எல்லாம் வெளுத்துவிட்டனரா? தி.மு.க.,வை ஹிந்து விரோத கட்சி என்று பேசுவர். ஆனால், பா.ஜ., ஆளும் மாநிலங்களில் கூட இல்லாத அளவிற்கு, தி.மு.க., ஆட்சியில், 4,000 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தி உள்ளோம்.

பா.ஜ., வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம், நான் ஆதாரத்துடன் பதில் சொல்லி விட்டேன். ஆனால், அவர்கள் நாங்கள் கேட்கும் எந்த கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. இவ்வாறு அவர் பேசினார். அதே நிகழ்ச்சியில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி பேசியதாவது: தி.மு.க.,வை பொறுத்தவரை, ஒரு குடும்பம் மட்டுமே பொறுப்பில் உள்ளது. மூத்த அமைச்சர் துரைமுருகன், அதிக ஆண்டுகளாக எம்.எல்.ஏ.,வாக இருந்தவர். அவரால் துணை முதல்வராகக் கூட வர முடியவில்லை. தினகரன், அ.தி.மு.க.,வில் இருந்தவர். இப்போது தனிக்கட்சி நடத்துகிறார். தி.மு.க.,வை வீழ்த்த வேண்டும் என்பதற்காக, கூட்டணி வைத்துள்ளோம்.

**அச்சத்தில் ஸ்டாலின்**

நாங்கள் கூட்டணி அமைக்க முடியாது என, தி.மு.க., நினைத்தது. ஆனால், கூட்டணி அமைத்து விட்டோம். மேலும் சில கட்சிகள் எங்களுடன் வருவர். ஆனால், தி.மு.க.,வுக்கும் காங்கிரசுக்கும் இடையே, பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கையை விட்டு நழுவி விடுமோ என்ற அச்சத்தில், ஸ்டாலின் இருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார். அதே நிகழ்ச்சியில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி பேசியதாவது: தி.மு.க.,வை பொறுத்தவரை, ஒரு குடும்பம் மட்டுமே பொறுப்பில் உள்ளது. மூத்த அமைச்சர் துரைமுருகன், அதிக ஆண்டுகளாக எம்.எல்.ஏ.,வாக இருந்தவர். அவரால் துணை முதல்வராகக் கூட வர முடியவில்லை.

**கூட்டணி**

தினகரன் அ.தி.மு.க.,வில் இருந்தவர். இப்போது தனிக்கட்சி நடத்துகிறார். தி.மு.க.,வை வீழ்த்த வேண்டும் என்பதற்காக, கூட்டணி வைத்துள்ளோம். நாங்கள் கூட்டணி அமைக்க முடியாது என, தி.மு.க., நினைத்தது. ஆனால், கூட்டணி அமைத்து விட்டோம். மேலும் சில கட்சிகள் எங்களுடன் இணைய வாய்ப்புள்ளது. ஆனால், தி.மு.க.,வுக்கும் காங்கிரசுக்கும் இடையே, பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கையை விட்டு நழுவி விடுமோ என்ற அச்சத்தில், ஸ்டாலின் இருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.









# குறவன்குளம் ஸ்ரீமக்காத்தா செவந்தாயி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம்

அலங்காநல்லூர். பிப்.01-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள குறவன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மக்காத்தா செவந்தாயிஅம்மன், அழகுமலையான், கருப்பசாம உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2 நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில், முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை முளைப்பாரி ஊர்வலம் மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது.

ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை சுற்றி வலம் வந்து கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்றுவட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை மலர்களும் அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீ மக்காத்தா செவந்தாயி அம்மன் கோவில் பங்காளிகள் செய்திருந்தனர்.



# மேலூர் சட்டமன்றத் தொகுதி சார்பாக ஜல்லிக்கட்டு போட்டி அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்

அலங்காநல்லூர், பிப்.1-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தாள் விழாவினை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் மேலூர் சட்டமன்ற தொகுதி சார்பாக மாபெரும் ஜல்லிகட்டு போட்டியை வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி , கொடியசைத்து தொடக்கி வைத்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அருகில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மற்றும் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் தற்காகுடி சரவணன், கழக நிர்வாகிகள் செல்வராஜ், ,ஆனையூர் பகுதி செயலாளர் மருதுபாண்டியன் கலந்து கொண்டனர்.

ஜல்லிகட்டு போட்டியில், பங்கேற்ற மதுரை, திண்டுக்கல், திருச்சி, புதுக்கோடை என பல்வேறு பகுதிகளிலிருந்து காளைகள்பங்கேற்றது.

ஜல்லிகட்டு போட்டியில் 600 மாடுபிடி வீரர்கள் 1300 காளைகள் கலந்து கொண்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் செய்தனர்.




# தி.மு.க.உடுமலை கிழக்கு ஒன்றிய கழக அலுவலகத்தை எம்.பி. ஈஸ்வரசாமி திறந்து வைத்தார்

திருப்பூர், பிப்.1-

திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை கிழக்கு ஒன்றிய கழக அலுலகத்தை பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி உடுமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஈ.கே. மாரிமுத்து மாவட்ட அவைத் தலைவர் ஜெயராம கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர்கள் செழியன், பாபு மற்றும் உடுமலை கிழக்கு ஒன்றிய கழக சார்பு அணி நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் மகளீர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# கள்ளிமந்தையத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா - அமைச்சர் அர. சக்கரபாணி பங்கேற்பு

திண்டுக்கல், பிப்.1-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கள்ளிமந்தையம் பகுதியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு அரசு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.




இந்நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செ. சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். விழாவில் அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் விழா பேருரை நிகழ்த்தி, தமிழ்நாடு அரசு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். குறிப்பாக கிராமப்புற மக்களின் அடிப்படை தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.


மேலும், கிராமப்புற மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நில உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் பட்டா வழங்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன் அடிப்படையில் கள்ளிமந்தையம் பகுதியைச் சேர்ந்த தகுதியான பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்களுக்கு பட்டா உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் வழங்கினார். அரசு வழங்கிய நலத்திட்ட உதவிகளைப் பெற்ற பயனாளிகள் பெரும் மகிழ்ச்சியுடன் அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றியை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# திருப்பூர் பெருமாநல்லூரில் அதிமுக கழக சார்பில் 120 அடி உயர கொடிக்கம்பம்

திருப்பூர், பிப்.1-

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொங்கு மண்டல வரலாற்றில் சிறப்பு வாய்ந்த நிகழ்வாக, திருப்பூர் பெருமாநல்லூரில், மாநகர் மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளரும், முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வேல்குமார் சாமிநாதன் அவர்களது ஏற்பாட்டில், சொந்த நிதியான 25 லட்சம் மதிப்பீட்டில் 120 அடி உயரத்தில் கழகக் கொடி பட்டொளி வீசி பறக்க கடந்த 4 மாத காலமாக வேலை நடைபெற்று வந்தது. அது தற்போது நிறைவு பெற்று விரைவில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி திருக்கரங்களால் விரைவில் இந்த கொடி கம்பம் திறக்கப்பட இருக்கிறது.



திருப்பூர் கோவை கரூர் சேலம் நாமக்கல் ஈரோடு போன்ற கொங்கு மண்டலம் எங்கேயும் இது போன்று 120 அடி உயரத்தில் கொடி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முயற்சி எடுத்த வேல் குமார் சாமிநாதனுக்கு கழக நிர்வாகிகள் பாராட்டுகளை தெரிவித்தனர்.



■ பழனி தை பூஜை பாதயாத்திரையாக வருகை தந்த பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் அவர்களுக்கு பாஜக தெற்கு மாவட்ட தலைவர் மோகனப்பிரியா சரவணன் அவர்கள் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பாஜக மாநில பொறுப்பாளர்கள் ஜோதீஸ்வரி கந்தசாமி, உடுமலை நகர மண்டல தலைவர் பாலகுரு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு வழங்கினார்கள்.



# மதுரையில் உத்தமர் காந்தியடிகள் நினைவு நாள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

மதுரை, பிப்.01-

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 79ஆவது நினைவு நாளை முன்னிட்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை பொதுமக்கள் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எடுத்துக்கொண்டனர்.

மாநகர காவல் ஆணையர் முனைவர் லோகநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) வனிதா ஆகியோர் உடன் உள்ளனர்.



# மதுரையில் அரசு அலுவலர் சங்க ஒன்றியம் சார்பில் அமைப்பு தின விழா கொண்டாட்டம்

மதுரை, பிப்.01-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மதுரை மாவட்டத்தின் சார்பாக 106 வது அமைப்பு தினம் மாவட்டத் தலைவர் அ.இளங்கோ தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மேனாள் பொதுச்செயலாளர் சுருளிராஜன் மற்றும் மேனாள் மாவட்டத் தலைவர் ஜெயபாலன், ஆகியோர் சங்க கொடியை ஏற்றி இனிப்பு வழங்கினர்.

நடைபெற்ற நிகழ்வில் மாநில செயலாளர் சண்முகசுந்தரம், மாநில துணை பொதுச்செயலாளர் ஜாகிர்உசேன், மாநில துணைத்தலைவர் சசிகுமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் குமார், சங்கீதா, உமாமகேஸ்வரி, தவமணி, ரேவதி, சரவணகுமார், சுப்பிரமணியன், கோபி, கண்ணன், ராஜேஷ். பழனிவேல், ராஜன், குணசீலன், பாலமுருகன். செந்தில்குமார், உள்ளிட்ட மாநில, மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் இணைப்பு சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் ரபீக்ராஜா, நன்றியுரை கூறினார்.

# சிறுபான்மை மக்களின் நலனுக்காக குரல் கொடுப்பவர் விஜய் தவெக மாநில துணை பொதுச் செயலாளர் ராஜ்மோகன்

சங்கரன்கோவில், பிப்.1-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயண சாமி கோவிலில், தவெக மாநில துணைப் பொதுச் செயலாளர் ராஜ் மோகன் சிறப்பு வழிபாடு செய்து தங்கத்தேர் இழுத்து சுவாமி தரிசனம் செய்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளரிடம் கூறியதாவது:

தமிழகத்தின் ஒவைசி விஜய் என்று சபாநாயகர் அப்பாவு கூறியுள்ளார். சபாநாயகருக்கு ஒரு மாண்பு இருக்கிறது. மரபு இருக்கிறது. ஒரு எல்லை இருக்கிறது. சபாநாயகர் ஒரு கட்சியினுடைய பிரதி நிதி கிடையாது. கட்சிகளின் பிரதிநிதி. சபாநாயகர் பல சந்தர்ப்பங்களில் இது போல ஒரு தலைப்பட்சமாக ஒரு கட்சியை சார்ந்தவராக



பேசுவது என்பது ஏற்கத்தக்கதல்ல. தமிழகத்தினுடைய கடைசி நம்பிக்கை நட்சத்திரமாக விஜய் செயல்பட்டு வருகிறார். சிறுபான்மை மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வருகிறார். சிறுபான்மையினர் நலனுக்காக சட்டரீதியாக வழக்குத் தொடுத்துள்ளோம்.

சமீபத்தில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் தமிழக வெற்றி கழகத்திற்கு 20 சதவீத வாக்குகள் என்று கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளனர். கருத்துக் கணிப்பு முழுமையாக வரவில்லை. அதையும் மீறி அதிக சதவீத வாக்குகளை பெறுவோம். தமிழகத்திற்கு வேலைக்கு வந்த வட மாநில தொழிலாளரின் குடும்பத்துடன் கொலை செய்யப்பட்டது வேதனையாக இருக்கிறது. தமிழகத்தில் தோட்டத்துக் கொலைகள் நடந்து வருகிறது. தமிழகத்தில் காணாமல் போன சட்டம் ஒழுங்கை கண்டுபிடித்து தருபவருக்கு எங்கள் கட்சி மாவட்ட செயலாளர் ரூபாய் ஒரு லட்சம் பரிசு தருவார். தமிழகத்தில் கூட்டணி கட்சி தலைவர் இல்லாமல் எந்த கட்சியின் ஆட்சியை பிடிக்க முடியாது. காங்கிரஸ் கட்சிக்கு 3000 ஓட்டு 4000 ஓட்டு உள்ளது என்று கிண்டல் பண்ணுகிறார்கள். திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றார். காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியாது.

இவ்வாறு ராஜ்மோகன் தெரிவித்தார். அப்போது தென்காசி வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக்கழக செயலாளர் மாரியப்பன், மாநில பேச்சாளர் ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தாம்பரம் காவல் ஆணையர் அலுவலக கட்டிடத்தை காலி செய்யும் விவகாரம்: தனி நீதிபதி உத்தரவில் தலையிட முடியாது ஐகோர்ட்



சென்னை, பிப்.1-

தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகம் இயங்கும் தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தை 2 ஆண்டுகளில் காலி செய்து கொடுக்க வேண்டும் என்று தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவில் தலையிட முடியாது என தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்துள்ளது.

தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகம், சோழிங்கநல்லூர் பகுதியில் தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. இந் நிலையில் தங்களது கட்டிடத்தை காலி செய்து தரக் கோரி உரிமையாளர்களான கோட்டூர்புரம் சரத்குமார், வெங்கடேஷ், சவுத்ரி ஆகியோர் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிறப்பித்த உத்தரவில், இந்த கட்டிடத்துக்கான வாடகையை ரூ. 6 லட்சத்தில் இருந்து ரூ. 13 லட்சமாக உயர்த்தியும், இந்த கூடுதல் தொகையான ரூ. 2.18 கோடியை கடந்த ஆண்டு டிசம்பருக்குள் மனுதாரர்களுக்கு வழங்க வேண்டுமென்றும், 2 ஆண்டுகளில் அந்த கட்டிடத்தை காலி செய்து மனுதாரர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுமீதான விசாரணை தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி. அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், "தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்துக்கு சொந்த கட்டிடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு விட்டது.

பிப்.13ம் தேதி முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டுகிறார். 18 மாதங்களில் அந்த கட்டிடம் கட்டி முடிக்கப்படும். அதுவரை தனி நீதிபதி உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும்" என வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதிகள், வாடகையை உயர்த்தியும், 2 ஆண்டுகளில் காலி செய்து கொடுக்க வேண்டுமென்றும் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என தெரிவித்து விசாரணையை 2 மாதங்களுக்கு தள்ளி வைத்துள்ளனர்.

# மயிலம் தொகுதியில் திமுக அதிமுக போட்டி?

## கூட்டணியை இறுதி செய்வதற்கு முன்பே தீவிரம்



விழுப்புரம், பிப்.1-

தமிழகத்தில் தேர்தல் கூட்டணியை இறுதி செய்ய முடியாமல் திமுக மற்றும் அதிமுக திணறி வருகிறது. ராமதாஸ் தரப்பு பாமக, தேமுதிக மற்றும் புதிய தமிழகம் உள்ளிட்ட சிறிய கட்சிகளால் குழப்பம் தொடர்கிறது.

இந்நிலையில், விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக மற்றும் அதிமுக தேர்தல் பணியை தொடங்கிவிட்டது. அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் போட்டியிட உள்ளார். இதற்கான கட்டமைப்பு பணிகளை அவரும், அவரது அண்ணன் ராதாகிருஷ்ணனும் செய்துவிட்டனர்.

இதனால், மயிலம் தொகுதியின் சிட்டிங் எம்எல்ஏவான அன்புமணி தரப்பு பாமகவைச் சேர்ந்த சிவக்குமார், விக்கிரவாண்டி தொகுதியில் களமிறங்க இருக்கிறார்.

இதற்கிடையில் திமுக சார்பில் போட்டியிட மதிமுக வரவான முன்னாள் எம்எல்ஏவும், கடந்த முறை (2021ல்) போட்டியிட்டு தோல்வியை சந்தித்த மாசிலாமணி, தேமுதிக வரவான திமுக தலைமை தீர்மானக் குழு உறுப்பினரும், திமுக எம்பி ஜெகத்ரட்சகன் ஆதரவாளருமான செஞ்சி சிவா (2011ல் வெற்றி வாய்ப்பை பறிகொடுத்தவர்) மற்றும் விழுப்புரம் வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் சேகர் ஆகியோர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதனால், மயிலம் தொகுதியில் திமுக மீண்டும் போட்டியிடும் என்ற நம்பிக்கையுடன் உடன்பிறப்புகள் வலம் வருகின்றனர். இதன் எதிரொலியாக, மயிலம் ஒன்றியம் டி.கேணிப்பட்டு கிராமத்தில் 'நமது சின்னம், எங்கள் சின்னம் உதயசூரியன்' என சுவர் விளம்பரம் செய்யும் பணியில் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து டி.கேணிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவரும், வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட அமைப்பாளரான செந்தில்குமார் கூறும்போது, "மயிலம் தொகுதியில் திமுகவுக்கு வெற்றி வாய்ப்பு அமோகமாக இருக்கிறது.

மயிலம் தொகுதியில் திமுக மீண்டும் போட்டியிடுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால், தொண்டர்கள் ஆர்வத்துடன் திமுகவின் உதயசூரியன் சின்னத்தை சுவர் விளம்பரம் செய்யும் பணியை தொடங்கி உள்ளனர்" என்றார்.

திமுக மற்றும் அதிமுக கூட்டணி முடிவு எட்டாமல் இழுபறி நீடித்து வரும் நிலையில், மயிலம் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக மற்றும் அதிமுக போட்டியிடுவதை உடன்பிறப்புகளும், ரத்தத்தின் ரத்தங்களும் உறுதி செய்து விட்டனர். இவர்களது ஆரூடம் நிறைவேறுவது, இரு கட்சிகளின் தலைமையின் முடிவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் சங்கத்தினரின் தொடர் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக அறிவிப்பு



சென்னை, பிப்.1-

இடைநிலை ஆசிரியர்கள் தங்களின் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளனர். சமவேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் வெளியான அறிக்கையில்; "இடைநிலை ஆசிரியர்கள் சமவேலைக்கு சமஊதிய போராட்டம் சார்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அதில் மூன்று நபர்கள் ஊதிய குழு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு இடைநிலை ஆசிரியர்கள் ஊதிய முரண்பாடு சரி செய்யப்படும் என்றதின் அடிப்படையிலும் நமது அரசு மற்றும் தமிழக முதல்வர் மீது நம்பிக்கை வைத்து நல்லதொரு முடிவு ஏற்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் மாணவர்களின் கல்வி நலன், நெடு நாட்களாக போராடிவரும் இடைநிலை ஆசிரியர்கள் உடல் நலனை கருத்தில் கொண்டு நல்லெண்ண அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது.

கற்றல் இடைவெளியை நீக்கி முன்பைவிட கற்பித்தல் பணியில் வெகு சிறப்பாக ஈடுபடுவோம் என்று உறுதி அளிக்கிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கல்வி, விளையாட்டுத்துறை உயர்ந்து நிற்கிறது - அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு



சின்னாளபட்டி, பிப். 01-

திண்டுக்கல் மாவட்டம், என்.பஞ்சம்பட்டியில் செயல்பட்டு வரும் புனித அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் தங்கள் பள்ளிக்கு புதிய ஸ்மார்ட் வகுப்பறை வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அதற்கான நிதியை வழங்கினார். என்.பஞ்சம்பட்டி புனித அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்; பள்ளியில் நடைபெற்ற புதிய ஸ்மார்ட் வகுப்பறை திறப்புவிழாவிற்கு பள்ளி தாளாளர் அருட்சகோதரி சூசை மரியாள் தலைமை தாங்கினார். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட், ஒன்றிய துணைச் செயலாளர் வசந்தா கென்னடி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை ஆசிரியை அருட்சகோதரி ஜோஸ்பின் ஜெயமேரி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் புதிய ஸ்மார்ட் வகுப்பை திறந்து வைத்து பேசும்போது, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திட்டங்களால் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கல்வியும், விளையாட்டுத் துறையும் உயர்ந்து நிற்கிறது என்று கூறியதோடு, சிறுபான்மை இன மக்கள் குறிப்பாக கிறிஸ்துவ சமுதாய மக்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களால் கிராமப்புற மாணவர்கள் கல்வி கற்கும் நிலை அதிகரித்துள்ளது. அவர்களின் கல்வி நிறுவனங்களுக்கு தேவைப்படும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும். நான் தொடர்ந்து செய்து வருகிறேன். அது பள்ளி புதிய வகுப்பறைகளில் தொடங்கி, சைக்கிள் ஸ்டாண்டு, காம்பவுண்டு சுவர், நாடகமேடை, மேஜை நாற்காலிகள் பேருந்து வசதிகள் உட்பட அவர்கள் கேட்கும் அனைத்து நலத்திட்டங்களையும் வழங்கி வருகிறேன். அவர்களும் அதை சிறப்பான முறையில் பயன்படுத்தி மாணவர்களின் கல்வியை பாதுகாக்கிறார்கள் என நினைக்கும்போது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். இப்போது கூட அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சைக்கிள் ஸ்டாண்டு மற்றும் நாடக மேடை வசதி கேட்டுள்ளார்கள். அது உடனடியாக வழங்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகாந்தன், என்.பஞ்சம்பட்டி மணி, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் மணி, பட்டாதாரி ஆசிரியை பெட்ரீசியா ஹேமலதா, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், துணை அமைப்பாளர் என்.பஞ்சம்பட்டி மெல்வின், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், துணை அமைப்பாளர் கார்த்திக், அரசு ஒப்பந்ததாரர் ஜீசஸ் அகஸ்டீன், திண்டுக்கல மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ்;, முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் கே.பி.வீரையா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பாப்பாத்தி நாகராஜன், உலகநாதன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வசந்தகுமார், காணிக்கை சாமி, கிளைச் செயலாளர்கள் பஞ்சம்பட்டி தாஸ் வேளாங்கண்ணி, மில்மேடு அருண் பாண்டியன், என்.பஞ்சம்பட்டி முன்னாள் கிளைச் செயலாளர் ஜான் கென்னடி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# திருத்தணி முருகன் கோயிலில் தைப்பூசத்துக்கு இலவச பேருந்து சேவை



திருத்தணி, பிப்.1-

திருத்தணி முருகன் கோயிலில் தைப்பூச திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, நாளை முதல் பக்தர்களின் வசதிக்காக மலைக்கோயிலுக்கு 15 இலவச பேருந்து சேவைகள் துவங்கப்படும் என்று கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், மலைப்பாதையில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் வகையில், பக்தர்களின் கூட்டத்துக்கேற்ப கார்கள், இருசக்கர வாகனங்கள் மட்டும் அனுமதிக்கப்படும் என்று கோயில் நிர்வாகிக் தெரிவித்தனர்.

திருத்தணியில் வரலாற்று சிறப்புமிக்க முருகன் கோயிலில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, நாளை முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிமாநிலங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவடி சுமந்து வந்து சாமி தரிசனம் செய்கின்றனர். இதனால் கோயிலில் பக்தர்கள் தடையின்றி சாமி தரிசனம் செய்வதற்கு வசதியாக, கோயில் நிர்வாகம் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக, நாளை முதல் தைப்பூச விழா நிறைவு பெறும்வரை, ஒவ்வொரு நாளும் அதிகாலை 5 மணி முதல் இரவு வரை 15 இலவச சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதற்காக திருத்தணி ரயில் நிலையத்திலிருந்து 2 பேருந்துகள், தணிகை இல்லத்திலிருந்து 4 பேருந்துகள், அரக்கோணம் சாலையில் மலையடிவாரத்தில் இருந்து 9 பேருந்துகள் என மொத்தம் 15 இலவச பேருந்து சேவைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளில் பயணிகள் இலவசமாக பயணம் செய்து சாமி தரிசனம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், மலைக்கோயிலில் மாஸ்டர் பிளான் திட்டத்தின்கீழ் வாகன நிறுத்துமிடம், அன்னதான கூடம் உள்பட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் மலைக்கோயிலில் இடநெருக்கடி இருப்பதால், அங்கு அதிகபட்சமாக 250 கார்கள் மட்டுமே நிறுத்த முடியும். இதையடுத்து மலைக்கோயிலில் இடவசதிக்கேற்ப கார்கள் நிறுத்த அனுமதிக்கப்படும். அதேபோல் இடவசதிக்கேற்ப மலைக்கோயிலுக்கு இருசக்கர வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும்.

குறிப்பாக, மலைக்கோயிலில் போக்குவரத்து நெரிசல் தடுக்கும் வகையில், ஆட்டோக்கள் செல்ல முழுமையாக தடை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும், பக்தர்கள் தடையின்றி விரைவில் சாமி தரிசனம் ஏதுவாக கூடுதலாக வரிசை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று திருத்தணி கோயில் நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவித்தனர்.



# ஒட்டன்சத்திரத்தில் பழனி தைப்பூச திருவிழா

## பாதயாத்திரை பக்தர்களுக்கு உணவு வழங்கிய திமுக நகர வர்த்தக அணி

திண்டுக்கல், பிப்.1-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் பழனி முருகன் கோவில் தைப்பூசத் திருவிழாவிற்கு பாதயாத்திரையாகச் செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு திமுக நகர வர்த்தகர் அணி சார்பில் சிறப்பான முறையில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் திமுக நகர வர்த்தகர் அணி செயலாளர் ழி. சதீஷ் பாபு அவர்கள் நேரில் கலந்து கொண்டு, பழனி பாதயாத்திரை மேற்கொண்டு செல்லும் பக்தர்கள் அனைவரையும் "வருகஞ் வருகஞ்" என அன்புடன் வரவேற்றார். ஒட்டன்சத்திரம் வழியாக பயணிக்கும் பக்தர்கள் சோர்வின்றி பயணத்தைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த உணவு வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் சுத்தமான மற்றும் தரமான உணவு வழங்கப்பட்டு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இந்த மனிதநேய சேவையை பக்தர்கள் பெரிதும் பாராட்டினர்.

இந்த நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் திமுக நகர நிர்வாகிகள், வர்த்தகர் அணி நிர்வாகிகள் மற்றும் திமுக தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டு சேவைப்பணியில் ஈடுபட்டனர்.

மக்களின் நலனுக்காகவும், ஆன்மீகப் பயணங்களில் ஈடுபடும் பக்தர்களின் வசதிக்காகவும் திமுக தொடர்ந்து இத்தகைய சேவைப்பணிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம்




சின்னாளபட்டி, பிப்.1-

தமிழகம் முழுவதும் ஜனவரி மாதத்தில் சாலை பாதுகாப்பு மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சாலை பாதுகாப்பு அலகு மதுரை கோட்டப்பொறியாளர் வரலெட்சுமி தலைமை தாங்கினார். உதவி கோட்டப் பொறியாளர் சாந்தினி, நெடுஞ் சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு ஆத்தூர் உதவி கோட்டப் பொறியாளர் அழகர்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சாலை ஆய்வாளர் சீனிவாசன் வரவேற்று பேசினார். விழிப்புணர்வு கூட்டத்தில் மாணவர்கள் மத்தியில் பேசிய சாலை பாதுகாப்பு அலகு மதுரை கோட்டப்பொறியாளர் வரலெட்சுமி சாலை விபத்துகள் மற்றும் சாலை விபத்து தடுப்புகள், சாலை பாதுகாப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். நாம் (மாணவர்கள்) சாலை விதிகளை கடைபிடித்து செல்லும்போது விபத்தில்லா பயணம் ஏற்படுகிறது. மாணவர்கள் இருசக்கர வாகனங்களில் செல்லும்போது சாலை விதிகளை பின்பற்றினால் வாகன ஓட்டுனர்களுக்கு எந்த சிரமும் இருக்காது என்றார்.

நெடுஞ்;சாலைத்துறை அதிகாரிகள் சின்னாளபட்டி பேருந்து நிலையம் மற்றும் பூஞ்சோலைப் பகுதியில் பொதுமக்கள் மற்றும் இருசக்கர ஓட்டுனர்கள், நான்கு சக்கர வாகன ஓட்டுனர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளின்; சாலைப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டுனர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

# நீலகிரியில் எத்தனை தனியார் தங்கும் விடுதிகளுக்கு சீல்? அறிக்கை அளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, பிப்.1-

நீலகிரி மாவட்டத்தில் உரிய அனுமதியின்றி செயல்படும் எத்தனை ஹோம் ஸ்டே தனியார் தங்கும் விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அறிக்கை அளிக்க அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வனம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார் மற்றும் டி.பரதசக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தங்கும் விடுதிகள் சட்டவிரோதமாக செயல்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டவிரோத தங்கும் விடுதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது குறித்து கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஊட்டி, கொடைக்கானலில் உள்ள அனைத்து பிஷீனீமீ ஷிமீணீஹ் தங்கும் விடுதிகளையும் ஆய்வு செய்ய, மாவட்ட வருவாய் அதிகாரி, நகராட்சி ஆணையர், மாவட்ட சுற்றுலாத்துறை அதிகாரி ஆகிய மூன்று பேர் அடங்கிய குழுவை நியமித்து உத்தரவிட்டனர்.

இக்குழுவினர் தங்கும் விடுதிகளை ஆய்வு செய்து, அவை உரிய கட்டிட அனுமதி பெற்றுள்ளனவா? சுற்றுலாத் துறை உரிமம் பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த ஆய்வில், உரிய அனுமதிகளை பெறாத சட்டவிரோத தங்கும் விடுதிகளை எதிராக உடனடியாக மூட வேண்டும் என உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் வழக்கு மீண்டும் விசாரணை வந்தபோது, வனத்துறை சார்பாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், சிறப்பு வழக்கறிஞர் சீனிவாசன் ஆகியோர் ஆஜராகி, இதுவரை நீலகிரி மாவட்டத்தில் விதிமுறை மீறிய சுமார் 920 ஹோம் ஸ்டே தங்கும் விடுதிகளுக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளதாகவும், 76 விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவாக நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டு நிலை அறிக்கை ஒன்றையும் தாக்கல் செய்தனர்.

இதையடுத்து நீதிபதிகள், அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை ஏன் எடுப்பது இல்லை என கேள்வி எழுப்பினர். பின்னர் வழக்கு விசாரணையை 4 வாரம் ஒத்தி வைத்து அன்றைக்கு எத்தனை ஹோம் ஸ்டே (Home Stay) விடுதிகள் மீது நடவடிக்கை எடுத்தீர்கள் என்ற விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.மறந்து விடாதே / ஒரு நாள் இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு / அந்த மாறுதலை செய்வதற்கு தேறுதல் (தேர்தல்) உண்டு' என்ற எம்ஜிஆரின் பாடல் வரிகளையும் நினைவூட்டுகிறேன். விரைவில் தேர்தலை தமிழகம் சந்திக்கும்; மக்கள் மாறுதலை தருவார்கள். ஏய்த்து பிழைக்கும் தொழிலை இதுநாள்வரை செய்து வந்த தீயசக்தி திமுக கூட்டம் மூலைக்கு மூலை அடக்கி ஒடுக்கி வைக்கப்படும். தமிழக மக்கள் குறிப்பாக பெண்கள் சுதந்திரம் பெறுவார்கள்'' என்று பழனிசாமி கூறியுள்ளார்.

# “திமுகவை திருப்திபடுத்த தமிழ் மன்னர்களை அவதூறு செய்கிறார் திருமாவளவன்” தினகரன்



சென்னை, பிப்.1-

‘தமிழும், தமிழ் கலாச்சாரமும் அழிய தமிழ் நில மன்னர்கள்தான் காரணமா? திமுகவையும், அதன் தலைவர்களையும் திருப்திப்படுத்துவதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நில மன்னர்கள் மீது அவதூறுகளை அள்ளிவீசுவதை விசிக தலைவர் திருமாவளவன் இதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ் அழிவதற்கும், தமிழ் கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் பேசியிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் வருத்தமளிக்கிறது.

தமிழர்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டுக் கலாச்சாரத்தையும் போற்றிப் பாதுகாத்து, வீரத்தின் விளைநிலமாக தமிழகத்தை மாற்றி இன்றளவும் தெய்வங்களுக்கு இணையாகப் போற்றப்படும் தமிழ்நில மன்னர்கள் குறித்த தொல். திருமாவளவன் அரைவேக் காட்டுத்தனமான பேச்சு கடும் கண்டனத்திற்குரியது.

ராஜராஜன் தமிழ்ப் பெயரா? ராஜேந்திரன் தமிழ்ப் பெயரா? என பொதுவெளியில் கேள்வி எழுப்பும் தொல்.திருமாவளவன், முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயர்கள் தமிழ்ப் பெயரா என கேட்கும் தைரியமும், துணிச்சலும் இருக்கிறதா என்ற கேள்வி தமிழர்கள் அனைவரின் மத்தியிலும் இந்நேரத்தில் எழுந்திருக்கிறது.

எனவே, திமுகவையும், அதன் தலைவர்களையும் திருப்திப்படுத்துவதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நில மன்னர்கள் மீது அவதூறுகளை அள்ளிவீசுவதை இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனை கேட்டுக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிச் செல்ல மாட்டேன்: சசி தரூர் திட்டவட்டம்



திருவனந்தபுரம், பிப்.1-

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிச் செல்ல மாட்டேன் என திருவனந்தபுரம் எம்.பி.யும், கட்சியின் மூத்த தலைவருமான சசி தரூர் தெரிவித்துள்ளார்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நேற்று மகாத்மா காந்தியின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதில் திருவனந்தபுரம் காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் பங்கேற்றார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

நான் தொடர்ந்து காங்கிரஸில் இருக்கிறேன். வேறு எங்கும் செல்ல மாட்டேன். காங்கிரஸில் இருந்து விலகிச் செல்ல மாட்டேன். எனது முந்தைய கருத்துகள் பாஜகவுக்கு ஆதரவான கருத்துகள் கிடையாது. நமது தேசத்துக்கு ஆதரவான கருத்துகள். சில விவகாரங்களில் எனது கருத்துகள் மிகைப்படுத்தப்பட்டன.

ராகுல் காந்தி மதவாதம், பிரிவினைவாதம், வெறுப்புணர்வுக்கு எதிராக குரல் எழும்பி வருகிறார். நானும் மதவாதத்தை தீவிரமாக எதிர்க்கிறேன். இவ்வாறு சசி தரூர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக கேரள காங்கிரஸ் மூத்த தலைவரும் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான சதீசன் கூறும்போது, “கேரள காங்கிரஸ் தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இல்லை. நாங்கள் தலைமைக்கு கட்டுப்பட்டு செயல்படுகிறோம். வரும் தேர்தலின்போது 140 தொகுதிகளிலும் சசி தரூர் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வார்" என்று தெரிவித்தார்.

# சின்னாளபட்டி மருத்துவமனை விரைவில் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி




சின்னாளபட்டி, பிப். 01-

தமிழக மக்களை நோயின்றி காக்கும் காவல் தெய்வமாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காப்;பாற்றி வருகிறார் என்று என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் என்.எஞ்சம்பட்டியில் உள்ள புனித அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமிற்கு சுகாதாரதுறை துணை இயக்குநர் செல்வகுமார் தலைமை தாங்கினார். நலப்பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் பத்மா, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட், ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்தீஸ்வரி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் முகாமை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ பெட்டகங்களை வழங்கிய பின்பு பொலீதுமக்கள் மத்தியில் பேசிய போது முத்தமிழ் அறிஞர் முதல்வராக இருந்தபோது கொண்டவந்த வரும்முன் காப்போம் திட்டம் கிராமப்புற ஏழை மக்களை காப்பாற்றியது. அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் மூலம் தமிழகத்தில் உள்ள அனைவரையும் நோயின்றி காக்கும் நிலைமை உருவாகி உள்ளது. ஒரு மனிதனுக்கு உடலுக்கு என்ன பாதிப்பு என்று தெரிந்து கொள்ளாமலேயே இருப்பதால் பாதிப்;புகள் ஏற்படுகிறது. அதை தவிர்க்கத்தான் கிராமம் முதல் நகரம் வரை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்;றன. ஆத்தூர் அருகே மல்லையாபுரத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 18 லட்சம் பெறப்பட்டு உயர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார்.

முகாமில் மருத்துவர்கள் ரத்தீஸ் ஆனந்த், பிரபு, சர்மிளா, சுபாஷினி, பிரசாந்த், மங்கலேஸ்வரி, ரதிபிரியா, மருத்துவர் சிவா, சரவணபிரியா, திவ்யா, டீன் மெர்சிலி சுகாதார ஆய்வாளர்கள் சந்திரமோகன், தர்மராஜ், பிரபாகர், அருள், ராஜேந்திரன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ சிகிக்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்கள். 17 பிரிவுகளில் பொதுமக்களுக்கு சிகிச்சை மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

# அன்புமணிக்கு மாம்பழ சின்னம்: ராமதாஸ் தொடர்ந்த வழக்கு பிப்.2ல் விசாரணை!




சென்னை, பிப்.1-

பாமகவுக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்து, அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியதை எதிர்த்து அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில், பிப்ரவரி 2ம் தேதி விசாரணைக்கு வர உள்ளது.

பாமக கட்சியின் உரிமை தொடர்பாக அக்கட்சியின் தலைவர் அன்புமணிக்கும், நிறுவனர் ராமதாஸுக்கும் இடையில் மோதல் நடந்து வரும் சூழலில், கட்சிக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்துள்ளதாக, தேர்தல் ஆணையம் அன்புமணியின் முகவரிக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இந்தக் கடிதத்தை ரத்து செய்தும், தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப உத்தரவிடக் கோரியும், கட்சியின் நிறுவனர் ராமதாஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், கடந்த 2025 மே மாதமே பதவிக்காலம் முடிந்த நிலையில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக அன்புமணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்சி நிறுவனர் என்ற முறையில் தனது அங்கீகாரம் இல்லாமல், சட்டவிரோதமாக கட்சி கூட்டங்களை நடத்தி அன்புமணி உரிமை கோர முடியாது எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியிருக்க கூடாது என்றும், சின்னம் ஒதுக்கீடு தொடர்பாக தனக்கே கடிதம் அனுப்பியிருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், டெல்லி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம், மாம்பழ சின்னத்தை யாருக்கும் ஒதுக்காமல் முடக்கும் என உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால், இதுநாள் வரை சின்னத்தை முடக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில், பிப்ரவரி 2ம் தேதி விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

# “நான் வெல்வேன்... எனக்கு கிங் மேக்கர் அடையாளம் வேண்டாம்” : தவெக தலைவர் விஜய்



சென்னை, பிப்.1-

“இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெறப்போவது உறுதி எனும்போது, நான் ஏன் கிங்மேக்கராக இருக்கப் போகிறேன்,'' என்று தவெக தலைவர் விஜய் கூறியுள்ளார்.

விஜய் அரசியல் கட்சி ஆரம்பித்த பின்னர் முதன்முறையாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார்.

சென்னையில் அவரைச் சந்தித்த அந்த ஊடகக் குழுவினரிடம் விஜய் கூறியதாவது: கரூர் சம்பவம் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. இன்றளவும் என்னை அந்த நிகழ்வு பாதிக்கிறது, இப்படியொரு நிகழ்வு நடக்கும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

நான் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறேனோ அதில் நான் உறுதியாக இருப்பேன். எனது இலக்குகள் பற்றி அறியாமல் நான் எதையும் செய்வதில்லை. அந்தவகையில், அரசியல் தான் எனது எதிர்காலம் என்று நான் முடிவு செய்துவிட்டேன்.

‘ஜனநாயகன்’ படத்தின் வெளியீட்டுக்குச் சிக்கல் வரும் என்று நான் முன்கூட்டியே கணித்திருந்தேன். எனது படம் அரசியல் காரணங்களுக்காக நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதற்கு நான் மனதளவில் தயாராகியிருந்தேன். ஆனால், படம் தள்ளிப்போவதால் தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட நெருக்கடிக்காக நான் வருந்துகிறேன்.

அரசியலில் நான் கிங்மேக்கராக முத்திரை குத்தப்பட விரும்பவில்லை. நான் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற சூழல் இருக்கும்போது நான் ஏன் கிங்மேக்கராக இருக்கப் போகிறேன். எனக்குச் சேரும் கூட்டத்தை நீங்கள் கவனித்திருக்கிறீர்கள் தானே!.

நான் பல ஆண்டுகளாக சினிமாவில் நடித்துள்ளேன். இனி அரசியல் செய்வது என்று தீர்மானித்துதான் வந்துள்ளேன். இந்த மாற்றம் அத்தனை எளிதாக நடந்துவிடவில்லை. அரசியலில் எனது ரோல் மாடல் எம்ஜிஆர், ஜெயலலிதா தான். இவ்வாறு அந்தப் பேட்டியில் விஜய் கூறியுள்ளார். மேலும், விஜய் தான் ஷாருக்கானின் தீவிர விசிறி என்றும் கூறியுள்ளார்.

தவெகவுக்கு அண்மையில் தேர்தல் ஆணையம் விசில் சின்னத்தை ஒதுக்கியது. பொதுச் சின்னம் கிடைத்ததை தவெக தலைவர் விஜய், முதல் வெற்றி என்று சிலாகித்துப் பதிவிட்டிருந்தது நினைவுகூரத்தக்கது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000